# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056 ● பிப்ரவரி 01, 2025

Weekly E-paper ● February 01, 2025




## இந்தியாவின் நிதி நிலை அறிக்கையா? இல்லை பீகாரின் நிதி நிலை அறிக்கையா?

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

### நெஞ்சில் ஏந்துவோம் அறிஞர் அண்ணாவை!

திருப்பூர் மகிழவன்

### அந்தர் பல்டி

தலையங்கம்

### பெண் எனும் போர்வாள்

நூல் அறிமுகம் - வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056 ● பிப்ரவரி 01, 2025

Weekly E-paper ● February 01, 2025


# இந்தியாவின் நிதி நிலை அறிக்கையா? இல்லை பீகாரின் நிதி நிலை அறிக்கையா?

**வழக்கறிஞர் இராம. வைரமுத்து**

நிதி நிலை அறிக்கை என்பது பொதுவாக அரசு எவ்வளவு செலவு செய்தது, எவ்வளவு சம்பாதித்தது என்று குறிப்பிடும் ஒரு கணக்கு அறிக்கை ஆகும். அந்த அறிக்கையின் முடிவு உபரியாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ இருக்கலாம். கெடுவாய்ப்பாக மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு அமைந்த பிறகு இந்த நடைமுறை நிதியமைச்சர் ஆண்டுக்கொரு முறை பிரமாண்டமான அறிவிப்புகளை வெளியிடும் தளமாக மாறி விட்டது.

“ரூபாய் 12 லட்சம் ஆண்டு வருமானம் உள்ளவர்கள் வருமான வரி செலுத்த தேவையில்லை” என்ற அறிவிப்பே இந்த நிதி நிலை அறிக்கையில் முக்கிய அம்சமாக கூறப்படுகிறது. இந்தியாவில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்பவர்கள் 8 கோடி பேர். அதில் 5 கோடி பேர் வருமான வரி கணக்கைச் சமர்ப்பித்து வரி செலுத்தாதவர்கள். மீதமுள்ள 3 கோடி பேர் தான் வருமான வரி செலுத்துபவர்கள். 140 கோடி பேர் வாழும் இந்தியாவில் வெறும் 3 கோடி பேர் மட்டுமே பயனடையும் ஒரு அறிவிப்பு எவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும். தனிநபர் ஆண்டு வருமானமாக ரூ.12 லட்சம் வரை பெறுபவர்கள் வருமான வரி செலுத்தத் தேவையில்லை என்று அறிவித்து விட்டு அதன் பிறகு ரூ. 8 லட்சம் முதல் ரூ. 12 லட்சம் வரை வருமானம் பெறுபவர்களுக்கு 10% வரி விதிக்கப்படும் என அறிவித்துள்ளது குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. ஜி.எஸ்.டி வரி விகிதத்தில் பல்வேறு தரப்பினர் கோரிய சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தால் அதன் மூலம் பெரும்பான்மையான மக்கள் பலன் பெற்றிருப்பர். ஆனால் ஜி.எஸ்.டி வரியில் எந்த ஒரு சலுகையும் அளிக்கப்படவில்லை.



காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீட்டு வரம்பு இது வரை 74 சதவிகிதமாக இருந்தது. தற்போது அது 100 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் பொதுத்துறை நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் (எல்.ஐ.சி) அந்நிய முதலீட்டாளர்களுக்கு தாரை வார்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தனிப் பெரும்பான்மை இல்லாத இந்த அரசை தாங்கி நிற்கும் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதாதளம் ஆளும் பீகாரில் இந்தாண்டு இறுதியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. ஆகவே 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையில் “பீகார் மாநில விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளுக்கான புதிய திட்டம், பீகாரில் தேசிய உணவு தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை பயிலகம், பீகார் மாநிலத்தின் தலைநகர் பாட்னா விமான நிலையம் விரிவாக்கம், பாட்னா ஐ.ஐ.டி உள்கட்டமைப்பு விரிவாக்கம், நீர் அல்லி வாரியம், கிரீன்பீல்டு விமான நிலையம், மேற்குக் கோஷி கால்வாய் திட்டம், பூர்வோதயா முன்முயற்சி திட்டம்” போன்று பீகாருக்கு சாதகமான அம்சங்கள் பெருமளவில் இடம் பெற்றுள்ளது. இதனால் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தது ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கையா அல்லது பீகார் மாநிலத்தின் நிதி நிலை அறிக்கையா என்ற ஐயம் அனைவருக்கும் எழுந்துள்ளது.

அண்மையில் மணிப்பூரை ஆளும் பா.ஜ.க அரசுக்கான ஆதரவை நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதாதளம் விலக்கிக் கொண்டது. அதே போல் ஒன்றிய அரசுக்கான ஆதரவையும் ஐக்கிய ஜனதாதளம் விலக்கிக் கொண்டு விடுமோ என்ற அச்சத்தில் அக்கட்சியின் தலைவரான பீகார் முதல்வர் நிதிஷ்குமாரை திருப்திப்படுத்தும் நோக்கில் ஒன்றிய அரசு பீகாருக்கு பல்வேறு திட்டங்களை வாரி வழங்கியுள்ளது. ஆனால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கென இந்த நிதி நிலை அறிக்கையில் எவ்வித அறிவிப்பும் வெளியிடவில்லை. செங்கோலின் சிறப்பை பற்றிய திருக்குறளை வாசித்த நிதியமைச்சரின் செவிகளுக்கு “பல்வேறு மாநிலங்கள் கூட்டமைப்பாக உள்ள ஒன்றியத்தில் தங்கள் அரசியல் சுயலாபத்திற்காக ஒரு மாநிலத்திற்கு மட்டும் வளர்ச்சித் திட்டங்களை வாரி வழங்குவது தான் செங்கோன்மையா” என்று முழக்கமிடும் மக்களின் உரிமைக் குரல் கேட்கிறதா.

இப்போது இல்லையெனினும் விரைவில்

மக்களின் உரிமைக் குரல் உரக்க கேட்கும் !

அன்று ஆளும் பாசிசம் தோற்கும் !!

# பெரம்பலூர் ஆலோசனைக் கூட்டம்




பெரம்பலூர் மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் 23 - 01-2025 அன்று மாவட்டச் செயலாளர் தோழர் இராஜேஸ்வரன் தலைமையில், மாநில இளைஞரணித் துணைச் செயலாளர் தோழர் இளமாறன் முன்னிலையில் நடைபெற்றது. பேரவையின் தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார. மாவட்ட துணைச் செயலாளர் தோழர் இராகவி, மாவட்டத் தலைவர் தோழர் வெற்றிச் செல்வன், மாவட்டத் துணைத் தலைவர் தோழர் தமிழ்வேந்தன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் அஜித்குமார், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் தோழர் விடுதலைச்செல்வன், வேப்பூர் ஒன்றிய இளைஞரணி செயலாளர் தோழர் கலைவாணன், தோழர் அர்ச்சனா இராஜேஸ்வரன், தோழர்இரா. இரத்தினவேல் - (அரியலூர் மாவட்டம்) ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பெரம்பலூர் நகரம், ஏழு ஒன்றியங்கள், மூன்று பேரூராட்சிகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பாளர்கள் நியமிக்கவும், 08-03-2025 உலக மகளிர் நாளை முன்னிட்டு பேரவை பொறுப்பாளர்கள் அறிமுகப் பொதுக் கூட்டம் பெரம்பலூர் மாவட்ட திமுக தலைமை அலுவலகத்தில் சிறப்பாக நடத்துவதெனக் முடிவெடுக்கப்பட்டது.

# நெஞ்சில் ஏந்துவோம் அறிஞர் அண்ணாவை!

## திருப்பூர் மகிழவன்

ஆதிக்க இந்தியைத் தடுத்து நிறுத்தி இரு மொழிக் கொள்கை என்றார். மெட்ராஸ் மாகாணத்தின் பெயரை மாற்றி தமிழ்நாடு எனறு பெயர் சூட்டினார். ஆரிய -வைதீக சடங்குகளைத் தவிர்த்து சுயமரியாதை திருமணங்களுக்குச் சட்ட அங்கீகாரம் கொடுத்தார். ஸ்ரீ ,ஸ்ரீமதி, குமாரி என்ற வடமொழிச் சொற்களைத் தவிர்த்து, திரு, திருமதி, செல்வி போன்ற அழகு தமிழ் சொற்களை அறிமுகப்படுத்தினார், சமஸ்கிருத பேரலையைத் தடுத்து நிறுத்தித் தமிழ் பயிற்சி மொழி என்றார். அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை நீக்க ஆணை பிறப்பித்தார். குறுகிய காலம் ஆட்சி செய்தாலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து இந்திய ஒன்றியத்திற்கு எடுத்துக்காட்டாகத் தன்னுடைய ஆட்சியை மாற்றி அமைத்தவர் அறிஞர் அண்ணா.



“இந்த நாட்டிலுள்ள கட்சிகளுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அடிப்படையில் என்ன பேதம் இருக்கிறது என்றால், மற்ற எல்லாக் கட்சியினரும் இந்தியா ஒரே நாடு என்று வாதாடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தான் இந்தியா ஒரு நாடு அல்ல. இது பல நாடுகள் கொண்ட ஒரு துணைக் கண்டம் என்று சொல்கிறது.” (நம்நாடு : 19-04-1949) என்றார் அண்ணா.

இந்திய ஒன்றியத்தில் பல்வேறு மாநிலங்கள் மாநில சுயாட்சி உரிமையை உயர்த்திப் பிடித்துக் குரல் கொடுத்து வருகின்றன. அதற்கான முதல் புள்ளியை வைத்தவர் அறிஞர் அண்ணா. மாநில உரிமைகளைப் பாதுகாக்கும் மாநில சுயாட்சி முழக்கத்தை

இந்திய ஒன்றியத்தின் மாநிலங்களில் எல்லாம் கேட்க வழிகாட்டியாகத் திகழ்பவர் அண்ணா என்பது யாரும் மறுத்திட முடியாத உண்மை. ஜனநாயகத்தின் அடிப்படையை மறந்து மாநிலங்களின் இறையாண்மையைச் சிதைக்கும் மக்கள் விரோத அரசின் திட்டங்களையும்,மாநில உரிமைகளைச் சிதைத்திடும்

சட்டங்களையும், கல்வி உரிமையை பறித்திடும் ‘நீட்’ ‘புதிய கல்வி’ போன்றவைகளுக்கு எதிராகவும், கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க அரசை எதிர்த்துப் போராட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். ஆளுநர் எனும் நியமன பதவியின் வழியாக, மாநில அரசுகளின் உணர்வுகளுக்கு எதிராக அடாவடித்தனம் செய்யவைக்கும் ஆளுநர் பதவியை அகற்றிடும் அரசியல் சட்ட திருத்தத்தை கொண்டு வர வேண்டும் என்ற அறவழிப் போராட்டத்தை தமிழ்நாடு முன்னெடுத் உள்ளது என்றால் அது அண்ணா காட்டிய வழி.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் நடராசன் - பங்காரு அம்மாள் இணையரின் மகனாக செப்டம்பர் 15, 1909 ஆம் ஆண்டில் பிறந்தார். “ No sentence can end with because because, because is a conjunction “ என்று ஆங்கிலேயப் பல்கலைக்கழக மாணவர்களை மிரளவைக்கும் ஆங்கிலப் புலமை, எல்லையற்ற தமிழ் எழுத்தாற்றல், பேச்சாற்றல் கொண்ட, தந்தை பெரியாரின் தலைமகன் அறிஞர் அண்ணா 1967 ஆம் அன்டில் தமிழ்நாடு முதலைச்சர் ஆனார். பெப்ரவரி 03, 1969 அன்று மறைவு எய்தினார்.

இது அவரின் 56 ஆம் ஆண்டு நினைவு நாள், நெஞ்சில் நிறுத்துவோம்!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அந்தர் பல்டி

சென்னை, ஆளுநர் மாளிகையில் 21-01-2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேசும்போது, பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பெற்றோர் தங்கள் மகள்களைத் தமிழ்நாட்டுக்கு படிக்க அனுப்பும்போது அவர்களின் பாதுகாப்பை உணர்கின்றனர்.

இதனால் தமிழ்நாட்டுக்கு அதிகமான பெண்கள் படிக்க வருகின்றார்கள், என்று 'தமிழ்நாட்டில் பெண்களில் பாதுகாப்பை' உறுதிசெய்தார் அவர். ஆளுநர் மனதார வாழ்த்துகிறாரே என்று வியப்பாக இருந்தது.அப்படிப் பேசி பத்து நாள்கள் கூட ஆகவில்லை. அடித்தார் 'அந்தர்பல்டி'.

காஞ்சிபுரம் மாவட்டம் பொடவூரில் பிரம்மகுமாரிகள் சங்கப் பயிலரங்கத்தில் பேசிய ஆளுநர், சென்னையில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று பெற்றோர் நினைப்பதாகவும், அதை மாணவிகள் தம்மிடம் கண்ணீருடன் கூறியதாகவும் பேசி, கடந்த வாரம் தான்பேசியதை திருப்பியடித்தார் அவர்.

பேச்சில் நேர்மை இருக்கவேண்டும். ஒன்று 'சரி'என்று சொல்ல வேண்டும். அல்லது எடப்பாடியைப் போல 'தப்பு.. தப்பு.. தப்பு' என்றாவது சொல்ல வேண்டும். சீமானைப் போலப் பேசிக்கொண்டு இருக்கக் கூடாது.

உத்திரப் பிரதேசம் போன்ற வடமாநிலங்களைப் போல, பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தமிழ்நாட்டில் இல்லை. சில சமயங்களில் நடக்கும் தவறுகளுக்குக் காவல்துறை சரியாக, கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கின்றது. அவ்வளவு ஏன்? பெண்களுக்கு எதிரான சிறு குற்றங்களுக்குக் கூட கடுமையான தண்டனைகளைச் சட்டமாக்கியது தமிழ்நாடு அரசு. அதற்கு ஒப்புதல் கையெழுத்து போட்டுவிட்டு, இப்போது பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று பேசிக்கொண்டு இருக்கிறார் ஆளுநர்.

ஆளுநர், ஆளுநராக இருக்க வேண்டும் என்பது மரபு. ஆளுநர் பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கும் ஓர் அரசியல்வாதியாகச் செயல்படக் கூடாது.

ஆளுநரை மாற்ற வேண்டாம், அவர் பேச்சு எங்களுக்குச் சாதகமாக இருக்கிறது என்று தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சொல்கிறார் என்றால் அது வஞ்சப்புகழ்ச்சி (அணி) என்பது கூட ஒன்றியத்தின் காதுகளுக்கு எட்டவில்லை.

மாநிலத்திற்கு ஆளுநர் தேவையில்லை என்பது அறிஞர் அண்ணாவின் கருத்து, திராவிடத்தில் முடிவு. அந்தக் காலம் வரும்வரை இந்தக் கவர்னரை மாற்ற வேண்டும், ஒன்றிய அரசு!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# தென்காசி அரசியல் பயிலங்கம்





**தென்காசி மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையும், தென்காசி வடக்கு மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து 24-01-2025 அன்று புளியங்குடியில் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியல் பயிலரங்கில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் உரையாற்றினார்.**

# பெண் எனும் போர்வாள்

நூல் அறிமுகம்

**வெற்றிச்செல்வன்**

பெண் என்பவள் ஆணைப் போலவே படைக்கப்பட்டிருக்கும் இன்னொரு படைப்பு, இருவருக்கும் இடையிலான உயிரியல் வேறுபாட்டை தவிர. ஆனால் ஆண்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும், சமத்துவத்தை அடைவதற்கும் பெண்கள் எத்தனை நூறு ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது.... இன்னும் போராட வேண்டியிருக்கிறது. அவ்வாறாக உலக அளவிலும், இந்திய அளவிலும் பெண்ணுரிமைக்கான முழக்கங்களை எழுப்பிய பெண்மணிகளின் போராட்ட வரலாற்றையும், உலகின் பல்வேறு பகுதிகளில் பெண்களுக்கு எதிராக நடந்த கொடுமைகளையும் ஆவணப்படுத்தி இருக்கிறார் "பெண் எனும் போர்வாள்" நூலின் ஆசிரியர் பிருந்தா சீனிவாசன்.




பெண்ணின் உடல் ஒரு பண்டமாகவே ஆணாதிக்கச் சமூகத்தால் பார்க்கப்படுகிறது. உணர்ச்சியின் வடிகாலாக, வணிகச்சந்தையின் விற்பனைச் சரக்காகப் பெண்ணின் உடல் எப்படியெல்லாம் கையாளப்பட்டுள்ளதுஎன்ற கொடிய உண்மையை இந்நூலைப் படிப்பவர்களால் உணர முடியும். அதிகார வர்க்கமும் முதலாளித்துவமும் இதில் கைகோர்த்துச் செயல்பட்டன. "ஆறுதல் மகளிர்" என்ற போர்வையில் பெண்ணுடல் பொழுதுபோக்குப் பண்டமாக்கப்படுவதும், பாலியல் சுற்றுலா என்ற பெயரில் வணிகச் சரக்காக ஆக்கப்பட்டதும் கடந்த நூற்றாண்டின் கவனிக்கப்படாத காட்சிகள்.

கணவன் இறந்த பின்னர் மனைவியை உடன்கட்டை ஏறச் செய்யும் கொடூரமான சதி வழக்கம் சுதந்திரம் அடைந்த இந்தியாவிலும் தொடர்ந்தது, அவலத்தின் உச்சம். நாகரிகம் அடைந்த சமூகத்தில் தான் நாம் வாழ்கிறோமா என்ற கேள்வியை நமக்கு நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டிய இது போன்ற துயரமான நிகழ்வுகள் பல இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. நூலின் பெரும்பாலான பக்கங்கள் பெண்கல்வியை வலியுறுத்திச் செல்கின்றன. கல்வி ஒன்று மட்டுமே பெண்களின் அடிமைத் தளைகளை உடைக்கும் கருவியாக இருக்க முடியும் என்பது நூலின் அடிநாதம். "பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினைப் பேணுதற்கே" என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரிகளே இதற்குச் சான்றாகும். அதேநேரம் பெண்கள் கல்வி கற்பதற்கு தடையாக இருந்த சி.வி. இராமன் போன்றவர்களின் இன்னொரு பக்கத்தையும் இந்நூல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

பெண்கள் வாக்குரிமைக்காக வெளிநாடுகளில் போராடிய வரலாறு உண்டு. ஆனால் 1920 ஆம் ஆண்டிலேயே நீதிக்கட்சி அரசு தமிழ்நாட்டில் பெண்களுக்கான வாக்குரிமையைச் சாத்தியமாக்கியதை இந்நூல் பதிவு செய்துள்ளது.

பெண்களின் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்துகிற இந்த நூல் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் படிக்க வேண்டிய நூல், வரலாறு படைக்க விருப்பம் உடைய அனைத்து மகளிரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் இது என்றால் அது மிகையாகாது.

**நூல் : பெண் எனும் போர்வாள்**
**ஆசிரியர் : பிருந்தா சீனிவாசன்.**
**வெளியீடு : தமிழ் திசை**



ஈரோடு மாநகராட்சி திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் பெரியாரை இழிவாக பேசும் சீமானைக் கைது செய்யக்கோரி தேர்தல் ஆணையரிடம் பொதுச் செயலாளர் சிற்பி. செல்வராஜ் துணைப் பொதுச் செயலாளர் காசு நாகராஜன். ஈரோடு மாநகர மாவட்ட செயலாளர் தமிழ் குமரன் ஆகியோர் 31-01-2025 அன்று மனு கொடுத்துள்ளார்கள்.